


# தஞ்சை, சேலம் மினி டைடல் பூங்கா!

**திராவிட மாடல் அரசு**

88

**முகம் மாறும் மாநகரங்கள்**

**பன்னீர் பெருமாள்**

**'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

தமிழ்நாட்டில் சீரான வளர்ச்சியை உருவாக்கும் 'திராவிட மாடல் அரசு' பெண் கல்வியை ஊக்குவிக்க புதுமைப் பெண் திட்டத்தை உருவாக்கியது. படித்த பெண்கள் வேலை வாய்ப்புக்காக சென்னை வரும்போது அவர்களுக்கு பயன்பட 'தோழி விடுதி'யை உ ருவாக்கியது. 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலமாக மாணவர்களுக்கு திறன் பயிற்சி வழங்கியது. அதன் அடுத்த கட்டமாக அவர்களுக்குச் சொந்த ஊரிலேயே வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கவும் தொடர்ந்து திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது.

அந்த வகையில், இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் முன்னணி மாநிலமாக இருக்கும் தமிழ்நாட்டில் சென்னையைத் தொடர்ந்து, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் தகவல் தொழில்நுட்பத் துறையை விரிவுபடுத்தத் திட்டமிட்டது. அதன்மூலம் ஐ.டி. படித்த இளைஞர்கள் நகரங்களை நோக்கி படையெடுக்காமல், சொந்த ஊரிலேயே வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொள்ள முடியும்.

'எல்லோருக்கும் எல்லாம்' என்ற இலக்குடன் செயல்படும் நம் திராவிட மாடல் அரசு, நவீன தொழில்நுட்பம் உருவாக்கும் வேலை வாய்ப்பைப் பரவலாக்கத் திட்டமிட்டு கொண்டுவந்த திட்டம்தான் 'மினி டைடல் பூங்கா'.

"பரவலான வளர்ச்சியே பார் போற்றும் வளர்ச்சி, சீரான வளர்ச்சியே சிறப்பான வளர்ச்சி" என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்துக்கு ஏற்ப, தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்பச் சூழல் அமைப்பை விரிவாக்கம் செய்யும் வகையில், டைடல் பூங்கா நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் டைடல் நியோ நிறுவனம் ஆகியவை இணைந்து, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில், திட்டங்கள் தீட்டப்பட்டன.

'தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை மூலம், தமிழ்நாட்டின் இரண்டாம் நிலை நகரங்களான சேலம், விழுப்புரம், தஞ்சாவூர் என ஒன்பது இடங்களில் **'மினி டைடல் பூங்கா'** அமைக்கப்படும் என அறிவித்தார் நம் முதலமைச்சர்.

### விறுவிறுப்பான பணிகள்

அதன்படி, விழுப்புரம் மற்றும் திருப்பூர் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு, கடந்த 24.06.2022 அன்றும், வேலூர் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு, கடந்த 18.02.2023 அன்றும் முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

அதையடுத்து பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று, தமிழ்நாட்டின் முதல் மினி டைடல் பூங்காவை விழுப்புரம் மாவட்டத்தில், கடந்த பிப்ரவரி மாதம் 17-ஆம் தேதி நம் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

தஞ்சை மண்டலத்தில் வேலை வாய்ப்பெனில் விவசாயம் மட்டுமே. இத்தகையச் சூழலில்தான், தொழிற்துறை விரிவுபடுத்தும் வகையில், மினி டைடல் பூங்காவை, தஞ்சைக்குக் கொண்டு சென்றுள்ளது, தமிழ்நாடு அரசு.

2023-ஆம் ஆண்டு மே மாதம் தஞ்சாவூர், மற்றும் சேலம் மினி டைடல் பூங்காக்களின்




> ❖ இந்த 'மினி டைடல்' பூங்கா முழுமையான பயன்பாட்டுக்கு வரும்போது நேரடியாக 500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.
>
> ❖ பெருநிறுவனங்கள் தங்கள் கிளைகளை சிறுநகரங்களில் தொடங்கும் வாய்ப்பு உருவாகி உள்ளது. இதனால், உள்ளூரிலேயே இளைஞர்கள் பெரிய நிறுவனங்களில் பணியாற்றக் கூடிய வாய்ப்பு உருவாகியுள்ளது.
>
> ❖ அதிக நிறுவனங்கள் வரும்போது, எதிர் காலத்தில் கூடுதல் கட்டடங்கள் அமைக்கவும் வாய்ப்புகள் உள்ளன. இளைஞர்கள் சொந்த மாவட்டத்திலேயே இருந்து ஐ.டி. சார்ந்து பணிபுரிய இந்த மினி டைடல் பார்க் பெரிதும் உதவிடும்.

கட்டுமான பணிகளுக்கு காணொலி வழியாக முதலமைச்சர் அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

### தஞ்சை டைடல் பூங்கா

தஞ்சாவூர் மாவட்டம், பிள்ளையார்பட்டி அருகில் அமைந்துள்ள இந்த மினி டைடல் பூங்கா, 3.40 ஏக்கரில் ரூ.30.50 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் 55 ஆயிரம் சதுர அடி கட்டுமான பரப்பளவுடன் நிறுவப்பட்டுள்ளது. இந்த மினி டைடல் பூங்காவைக் கடந்த 23-ஆம் தேதி, தொடங்கி வைத்தார் முதல்வர்.

தஞ்சாவூர் மினி டைடல் பூங்கா கட்டடத்தில், 'ஹாம்லி பிசினெஸ் ஷொல்யூஷன்ஸ் இந்தியா லிமிடெட்', 'பிசினெஸ் ஷொல்யூஷன்ஸ் இந்தியா லிமிடெட், ஸ்டார்ட் அப்-டி.என்., இன்ஃபோஷிஸ் ஸாப்ட் வேர் டெக்னாலஜிஸ் (Hamly Business Solutions India Pvt. Ltd., Startup TN, Inforios Software Technologies India Pvt.) ஆகிய நிறுவனங்களுக்கு தள ஒதுக்கீட்டுக்கான ஆணைகளையும் திறப்பு விழாவில் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். தஞ்சாவூர் மினி டைடல் பூங்கா கட்டடத்தில், இதுவரை 30 சதவிகித தள ஒதுக்கீடு தொழில்நுட்ப நிறுவனங்கள் பெற்றுள்ளன.

### சேலம் மினி டைடல் பூங்கா

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டத்தில் ஆனைக் கவுண்டன்பட்டி மற்றும் கருப்பூர் கிராமத்தில் 29 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட மினி டைடல் பூங்காவையும் கடந்த 23-ஆம் தேதி அன்று முதலமைச்சர் அவர்கள் காணொலி வழியாகத் தொடங்கி வைத்தார்.

தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் 55,000 சதுர அடி பரப்பளவில் இந்த மினி டைடல் பூங்கா அமைந் துள்ளது.

இந்த மினி டைடல் பூங்காவில், தற்போது வரை 71 சதவிகித தள ஒதுக்கீடு முடிவடைந்துள்ளது. நம்ம ஆபீஸ், தமிழ் ஜோரஸ் பிரைவேட் லிமிடெட், டெல்த் ஹெல்த்கேர் பிரைவேட் லிமிடெட், ஏ.கே.எஸ். ஹைடெக் ஸ்மார்ட் ஷொல்யூஷன்ஸ், ஆக்சஸ் ஹெல்த் கேர் (Namma Office, Tamil Zorous Pvt. Ltd., Telth Healthcare Pvt. Ltd., AKS Hitech Smart Solutions, Access Healthcare) நிறுவனங்கள் இங்கு அலுவலகங்ளை அமைக்க ஒப்பந்தம் செய்துள்ளன.

### மினி டைடல் பூங்கா வசதிகள்

மினி டைடல் பூங்கா கட்டடங்களில் தலா 500 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள்




> **"எல்லோருக்கும் எல்லாம் என்கிற சமூக நீதி முழக்கம், எல்லா ஊருக்கும் எல்லாம் என்கிற வளர்ச்சியாக நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது!"**

பணிபுரியும் வகையில், குளிர்சாதன வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தொலைத்தொடர்பு வசதிகள், தடையற்ற உயர் அழுத்த மும்முனை மின் இணைப்பு மற்றும் மின் இயக்கி வசதிகள், மின்தூக்கி வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள், தீ பாதுகாப்பு மற்றும் கட்டட மேலாண்மை வசதிகள் ஆகியவை சர்வதேச தரத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.

மின்விளக்குகளுடன் உட்புறச் சாலை வசதிகள். 24X7 பாதுகாப்பு வசதிகள், உணவகம் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

"நம் அரசு சொந்த மாவட்டத்திலேயே வேலை வாய்ப்பை உருவாக்கித் தரும்" என சென்னை நந்தம்பாக்கத்தில், இந்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டில் அறிவித்தார் நம் முதலமைச்சர் அவர்கள். தொழில்நுட்பத்துறையில், அதன் செயல்வடிவம்தான் மினி டைடல் பூங்காக்கள். மினி டைடல் பூங்காவுக்குக் கிடைத்துள்ள வரவேற்புதான், அடுத்ததாக கரூர் மற்றும் திருவண்ணமாலைக்கும் மினி டைடல் பூங்கா அறிவிப்பாக வந்துள்ளது. எல்லோருக்கும் எல்லாம் என்கிற சமூக நீதி முழக்கம், எல்லா ஊருக்கும் எல்லாம் என்கிற வளர்ச்சியாக நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது.

**...சாதனை தொடரும்**

## உள் இட ஒதுக்கீடு யாருக்கு அதிகாரம்?




உள் இட ஒதுக்கீடு வழங்கும் அதிகாரம், மாநில அரசுகளுக்கு உள்ளது என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு, இந்திய ஒன்றியம் முழுமைக்கும் பேசுபொருளாக மாறி இருக்கிறது. குறிப்பாக, உள் ஒதுக்கீட்டில் தமிழ்நாட்டின் சட்ட வாதங்களே தீர்ப்புக்கு முன்னோடியாக இருந்தன. இந்தத் தீர்ப்பினை, சமூகநீதி, சமத்துவம் பேசும் கட்சிகளும், இயக்கங்களும் வரவேற்ற சூழலில், சிலர் மாநில அரசுக்கு உள் ஒதுக்கீடு அதிகாரம் இருக்கக்கூடாது, என்கிற வாதங்களை முன் வைத்து, அதற்கு சில தரவுகளை வெளியிட்டனர்.

அந்தத் தகவல்களுக்கு மறுப்பாக, திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி பேசியவற்றை தொகுத்து, 30 ரூபாய் விலையில், சிறு வெளியீடாக காட்டாறு பதிப்பகம் கொண்டு வந்துள்ளது. இந்த நூலில், உள் ஒதுக்கீட்டை ஆதரித்து 'தலித் முரசு' ஆசிரியர் புனித பாண்டியன் எழுதிய, 'உள் ஒதுக்கீட்டை அம்பேத்கர் எதிர்த்தாரா?' என்கிற கட்டுரையும் இடம் பெற்றுள்ளது.

அருந்ததியர் உள்ஒதுக்கீடு தொடர்பாக, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு, உள் ஒதுக்கீடு வழங்குவதில் அண்ணல் அம்பேத்கரின் நிலைபாடு என்ன? தமிழ்நாட்டில் அருந்ததியர் உள் ஒதுக்கீட்டின் தேவை, உள் ஒதுக்கீடு பற்றி பெரியாரின் நிலைபாடு, இட ஒதுக்கீட்டில் சுழற்சி முறை எதற்கு பயன்படும், உள்ஒதுக்கீட்டு உரிமை யாரிடம் இருக்க வேண்டும் ஆகியவற்றைப் புரிந்து கொள்ளும் வகையில் கொளத்தூர் மணி அவர்களின் விளக்கம் அமைந்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு, பட்டியல் சாதி மக்களைப் பிரித்து வைக்கிறதா?, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு முடிவுகள் சரியானதா? எல்லா பட்டியல் சாதிகளும் ஒரே வகையான சமூக நிலையில் இருக்கிறார்களா? என்கிற கேள்விகளுக்கும் விடை சொல்கிறது இந்த நூல். நூல் பெற 99421-19077 என்கிற எண்ணிற்கு அழைக்கலாம்.

## :ப்ளாஷ்பேக்



### தளபதிக்கு வரவேற்பு!



கே.எம்.ரவிச்சந்திரன்

1991-ஆம் ஆண்டு கழக இளைஞர் அணி நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கு, திருச்சி மாவட்டத்திற்கு வருகை தந்திருந்தார் அன்றைய இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்கள். அப்போது பொறையூர் கிளைக் கழகச் செயலாளராக இருந்த நான் தளபதி அவர்களைச் சந்தித்து மரியாதை செய்தேன். அப்போது, எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**– கே.எம்.ரவிச்சந்திரன், முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளர், நங்கவள்ளி, சேலம் மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### சமூகப் புரட்சியின் விதை!

1997-ஆம் ஆண்டில், செப்டம்பர் 20-ஆம் தேதி, கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, தமிழ்நாட்டில் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தொடங்கி வைக்கப்பட்டது. வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற விழாவில், அப்போதைய குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் தொடங்கி வைத்து உரையாற்றினார். தமிழ்நாட்டில் இருந்துதான் சமூகப் புரட்சிக்கான முதல் குரல் கொடுக்கப்பட்டது. சமூகப் புரட்சியின் பாரம்பரியத்தை நடைமுறை அரசியலிலும், அமைப்பு மற்றும் நிர்வாகத் துறைகளிலும் கலைஞர் கடைபிடித்து வருகிறார் என, கே.ஆர்.நாராயணன் பாராட்டினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

616

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131